# தேவனுடைய உண்மையான மிகச்சிறந்த சித்தம்

## 3.9 பெற்றுக்கொண்டே இருத்தல்




**வேத வசனம்:** **சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள்.**
*அப். 13:52*

**அறிக்கை:** **பருகித் திருப்தியடைய தேவன் நமக்காக ஜீவ நதியை வைத்திருக்கிறார்.**

**சத்தியம்:** கர்த்தராகிய இயேசு "இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை. கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" என்றார்.



**கற்பித்தல்:** *சத்தமாக வாசித்து மார்த்தாள் மரியாள் சம்பவத்தை நடித்துக் காண்பியுங்கள். (லூக்கா 10:38-42) சம்பவத்தின் முடிவுரை: மரியாள் நல்ல பங்கை தெரிந்தெடுத்தபடியால் இயேசு அவளைப் பாராட்டுகிறார். இயேசுவின் பாதத்தருகே நேரம் செலவு செய்வதே சிறந்தது.*

### வேதப் பகுதி: லூக்கா 10:38-42

**பாடம்**

**1. நாம் திருப்தியாயிருக்க இயேசு விரும்புகிறார்:** இயேசு கிறிஸ்து சொன்னார், "இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது". உலகத்தில் உள்ளவைகள் என்றும் நிலைத்திருக்கும் திருப்தியைக் கொடுக்காது. தேவனுடைய ஆசீர்வாததே உண்மையான திருப்தியைக் கொடுக்கும். ஆகையால் மரியாள் செய்ததுபோல நாமும் தேவனுடைய வார்த்தைகளையும் அவருடைய ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். வற்றாத ஜீவ நதியைப்போல தேவனுடைய ஆசீர்வாதங்கள் நம்முடைய இருதங்களையும் ஆத்துமாவையும் செழிக்கச் செய்யும். (யோவான் 4:13-14)

**2. எல்லாவிதமான ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளுதல்:** தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு அனைத்து வகையான ஆசீர்வாதங்களையும் கொடுக்கவேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார். அவை, தெய்வீக வழிநடத்துதல், அன்பான அரவணைப்பு மற்றும் உற்சாகப்படுத்துதல் போன்றவை. அவை வேதபுத்தகத்திலும் நமக்காக வாக்களிக்கப்பட்டிருக்கிறது. "ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்". வாழ்வின் சிறந்த பரிசுகள் தேவனிடத்திலிருந்து வரும். மார்த்தாள் மரியாளின் சம்பவத்தில் மார்த்தாளால் தன்னுடைய வேலையினிமித்தம் தேவனுடைய பாதத்தில் சிறிதுநேரம் கூட அமர்ந்திருக்க இயலவில்லை. மரியாளோ தன்னுடைய அனைத்து வேலைகளையும் ஒதுக்கிவைத்துவிட்டு தேவனுடைய பாதத்தில் அமர்ந்துகொண்டு அவருடைய வார்த்தைகளைக் கேட்டு, அவருடைய வாக்குறுதிகளைப் பெற்றுக்கொண்டாள். (யாக்கோபு 1:5-17)

**3. அதிக ஜெபம் அதிக ஆசீர்வாதங்களைக் கொடுக்கும்:** எவ்வளவு அதிகம் ஜெபிக்கிறோமோ அவ்வளவு அதிகம் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவோம். பழைய ஏற்பாட்டில் உள்ள தானியேல் தினமும் மூன்று வேளைகள் ஜெபித்தார். ஆகையால் அவர் தொடர்ச்சியாகத் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு ஞானமுள்ள மனிதனாகவும், வெற்றியுள்ள மனிதனாகவும் வாழ்ந்தார். (தானியேல் 6:10, யாக்கோபு 1:5,17)

**4. பெற்றுக்கொள்ள விசுவாசி:** தேவன் சொன்னார், "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்., தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்., தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்". (மத்தேயு 7:7, 21:22)

**முடிவுரை:** கர்த்தர் இயேசு சொன்னார், "இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை. கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்". நாம் தேவனுடைய ஆச்சரியமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். நாம் தேவனுடைய ஆச்சரியமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது தேவனுடைய சித்தம்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.